# பாடம் 54: திருமணமும் குடும்பமும்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடத்தில், மற்ற மக்களோடு நல்ல உறவுநிலைகளோடு இருந்து, நமக்கு அடுத்துள்ளவரை சரியான விதத்தில் அன்பு செய்து, உண்மையான மகிழ்ச்சியோடு வாழ்ந்திட, பாலியல் தூய்மை, அல்லது கற்பின் முக்கியத்துவம் பற்றி நாம் கற்றோம். இந்த பாடத்தில், திருமணமான மக்கள் மற்றும் அவர்கள் அன்பு மற்றும் தன்னளிப்பு என்ற கொள்கைகள் அடிப்படையில் தங்களது குடும்ப வாழ்வை எப்படி நடத்த வேண்டும் என்பதைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**

1. திருமணம் என்பது கத்தோலிக்கத் திருச்சபையில் மட்டுமின்றி, பெரும்பாலான மனித வரலாற்றில் புனிதமானதாகக் காணப்படுகிறது. காலங்கள் தோறும் இருந்து வருகின்ற இயற்கை நிறுவுதலாக திருமணம் இருக்கிறது. இது ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையிலான மிக நெருங்கிய ஒன்றிப்பு வடிவமாக எல்லா நேரத்திலும் எல்லா இடங்களிலும் இருந்து வருகிறது. ஒரு திருமணத்தில், ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஊடிடை ஆதரவு மற்றும் இனப்பெருக்கம் ஆகிய நோக்கங்களுக்காக ஒருவர் மற்றவரோடுத் தங்களை இணைத்துக் கொள்கின்றனர் என்பது புரிந்துகொள்ளத் தக்கது.

எனினும், திருமணம் என்பது மனிதரால் அன்றி, மாறாக கடவுளால் நிறுவப்பட்டது என்பதைப் புரிந்துகொள்வது அவசியம்: ‘‘கடவுள் தாமே திருமணத்தை ஏற்படுத்தினார்’’ (கதிம 1603). ‘‘பண்பாடுகள், சமூகக் கட்டமைப்புகள், மற்றும் ஆன்மிக மனப்பாங்குகளுக்கு’’ ஏற்ப அது காலங்கள் தோறும் வேறுபட்ட மாறுபாடுகள் ஊடாகச் சென்றாலும், கடவுள் ஆணையும் பெண்ணையும் உருவாக்கிய பொழுது, அவரே இத்தகைய உறவுநிலையை அவர்களிடையே நிறுவினார். இதன் காரணமாகவே ‘‘திருமண ஒன்றிப்பின் மேன்மை எல்லா பண்பாடுகளிலும் இருக்கிறது’’.

2. குடும்பமானது நாகரிகத்தின் தொட்டிலாக இருக்கிறது. இது மனிதராகப் இருக்கிறதன் பொருளை மக்கள் கற்கின்ற இடமாகும். இதன் காரணமாகவே, ‘‘திருமணமும் குடும்பமும் மிகு மதிப்புள்ள மனித விழுமியங்களைக் கட்டமைக்கின்றன’’ (*பமிலியாரிஸ் கொன்சார்த்தியோ*, 1) என்று திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் கற்பிக்கிறார்.

குடும்பத்தை ‘‘முதல் இயற்கைச் சமூகமாக’’ திருச்சபை கருதுகிறது, மேலும் ‘‘அதைச் சமூக வாழ்வின் மையமாக வைக்கிறது’’ (*திருச்சபையின் சமூகக் கோட்பாடுகளின் சுருக்கம்*, 211).

*கதிம 2207*: ‘‘குடும்பம் என்பது சமூக வாழ்வின் தொடக்க நிலையாக இருக்கிறது. இந்த இயல்பான சமூகத்தில் தங்களை அன்பிலும் வாழ்வின் கொடையிலும் வழங்க கணவனும் மனைவியும் அழைக்கப்பட்டுள்ளனர். குடும்பத்திற்குள் உள்ள உரிமைத்துவம், நிலைத்தன்மை, மற்றும் உறவுநிலைகளின் வாழ்வு ஆகியவை சமூகத்தில் சுதந்திரம், பாதுகாப்பு, மற்றும் சகோதரத்துவத்தின் அடித்தளங்களைக் கட்டமைக்கின்றன. ஒரு குழுமமாக இருக்கின்றக் குடும்பத்தில், குழந்தைப் பருவத்தில் இருந்து, ஒருவர் அறநெறி விழுமியங்களைக் கற்கலாம், கடவுளுக்கு மதிப்பளிக்கத் தொடங்கலாம், மேலும் சுதந்திரத்தை நன்றாகப் பயன்படுத்தலாம். சமூகத்தில் வாழ்வதற்கானப் புகுநிலையாக குடும்ப வாழ்வு இருக்கிறது.’’

படைத்தவரின் திட்டத்தில், ‘‘தனிநபருக்கும் சமூகத்துக்கும் ‘மனிதராக்குதலின்’ முதன்மை இடமாக’’ மற்றும் ‘‘வாழ்வு மற்றும் அன்பின் தொட்டிலாக’’ குடும்பம் வழங்கப்படுகிறது என்று திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் கற்பிக்கிறார் (*கிறிஸ்திபிதேலெஸ் லாய்ச்சி*, 40).

‘‘மனிதகுலத்தின் எதிர்காலம் குடும்பத்தின் வழியாகக் கடத்தப்படுகிறது’’ (*பமிலியாரிஸ் கொன்சார்த்தியோ*, 86) என்று திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் கூறுகிறார். குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் இடையே சிக்கலான உறவுநிலை இருக்கிறது என்பது இந்த வாக்கியத்தின் பொருளாகும், மேலும் அது இருவழி உறவுநிலையாக உள்ளது. குடும்பத்தில் இருந்து வழிந்தோடும் நன்மை சமூகத்திற்குள் நுழைகிறது. குடும்பம் உடைபடும் பொழுது, சமூகம் ஆபத்துக்கும் சமரசத்திற்கும் உள்ளாகிறது. அதுபோல, நன்றாக ஊட்டி வளர்க்கப்பட்டச் சமூகமும் குடும்பத்தின் எய்துபணியை நிறைவேற்ற உதவுகிறது, இங்கு சமூகத்தில் தவறாகச் செல்வது குடும்பத்தின் மீது எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகிறது.

3. கத்தோலிக்கத் திருச்சபைக்கு, மேலே விவரிக்கப்பட்டதை விட கிறிஸ்தவத் திருமணம் மிக மேலானது. இது வெறும் இயற்கை நிறுவுதல் என்பதை விட மேலானது. இது கிறிஸ்துவுக்கும் அவரது மணவாட்டியானத் திருச்சபைக்கும் இடையிலான உறவுநிலையின் காணப்படும் பிரதிபலிப்பாக இருக்கிறது. ஆகவே, திருமணத்தை மிக முக்கிய உறவுநிலையாக திருச்சபை கருதுகிறது. கிறிஸ்தவத் திருமணத்தில் கிறிஸ்துவின் சீடர்களின் குழுமம் சிறப்பு பொறுப்பு கொண்டுள்ளது. திருச்சபையின் வாழ்வு இயேசுவைச் சுற்றி வருவதால், கிறிஸ்தவத் திருமணம் என்பது திருமணமான இணையரின் அர்ப்பணத்தை, கிறிஸ்துவில் அவர்கள் கொண்டுள்ள விசுவாசத்தை ஊடிடையாகப் பகிர்வதற்கும் ஒருசேர அவரது வாழ்வைப் பகிர்வதற்கும் உரித்தாக்குகிறது.

4. இயேசு சிலுவையில் தாம் இறக்கும் முன்பு, ‘‘தெத்தேலெஸ்தய்’’ (*இது நிறைவேறிற்று*) என்று கூறியதாக யோவான் நற்செய்தி பதிவு செய்கிறது. யோவான் நற்செய்தி பதிவு செய்கிறது. இந்த சொல்லை நான்காம் நூற்றாண்டில் புனித எரோனிமுஸ் *கொன்சும்மாத்தும் எஸ்த்* (‘‘இது முழுமையுற்றது’’) என்று லத்தீனில் மொழிபெயர்த்தார். சிலுவையில் இயேசு திருச்சபையைத் தம் தூய மணவாட்டியாக ஏற்றார் என்பது இதன் பொருளாகும். சிலுவை,

பலியின் இடமாக இருந்ததை விட, கிறிஸ்து மற்றும் அவரது மணவாட்டியின் மஞ்சமாக இருந்தது: ஒரே, தூய, கத்தோலிக்க, மற்றும் திருத்தூதரியத் திருச்சபை.

இதன் காரணமாகவே, “திருமணம் என்பது நமக்கான கடவுளின் அன்பின் வடிவுருவாக இருக்கிறது” திருத்தந்தை பிரான்சிஸ் (2014 ஏப்ரல் 2ல்) கற்பித்தார். கிறிஸ்தவத் திருமணம் என்பது கடவுளின் அன்புக்கான கிறிஸ்தவ இணையரின் சாட்சியமாக இருக்கிறது. கிறிஸ்தவ துணைவர்களின் வழியாகவும், நமக்கானத் தமது அன்பை கடவுள் அன்றாட அடிப்படையில் வெளிப்படுத்துகிறார்.

5. திருமுழுக்கு பெற்ற இரண்டு நபர்கள் திருமணத்தில் இணையும் பொழுது, அவர்கள் ஒருசேர திரித்துவத்தின் மறைபொருளுக்குள் நுழைகின்றனர், மேலும் தூயநிலைக்கான உலகளாவிய அழைப்பை ஒரு புதிய, தனித்துவமான விதத்தில் வாழ்கின்றனர். அவர்களின் ஒன்றிப்பில், திரித்துவத்தின் வடிவுருகளாக அல்லது உருவங்களாக அவர்கள் ஆகின்றனர்.

திரித்துவம் என்பது கடவுளின் *ஒன்றிப்பாக* (குழுமம்) இருக்கிறது. நிறைவான அன்பைப் பகிரும் ஆள்களின் குழுமமாக கடவுள் இருக்கிறார். அதே விதத்தில், மனிதர்களைத் தமது திரித்துவ உறவுநிலைக்குள் கொணர கடவுள் விரும்புகிறார், அதனால் அவரது வாழ்விலும் அவரது நிறைவான அன்பிலும் நாம் பங்குகொள்ள முடியும். தமது நிறைவான அன்பைப் பகிர கடவுள் நமக்கு கொணரும் மிக அடிப்படை வாகனமாகத் திருமணம் இருக்கிறது. இதன் காரணமாகவே, எல்லா திருமணங்களும் (சிறப்பாக, கிறிஸ்தவத் திருமணங்கள்) தூய திரித்துவத்தின் உறுப்பினர்கள் ஒருவர் மற்றவரோடு கொண்டுள்ள உறவுநிலைகளை மாதிரியாகக் கொள்ள வேண்டும்.

6. திருமுழுக்கு பெற்ற இரண்டு கிறிஸ்தவர்களுக்கு இடையிலான ஓர் உண்மை திருமணம் ஓர் அருளடையாளமாக இருக்கிறது. செல்லத்தக்க விதத்தில் திருமுழுக்கு பெற்ற ஒரு கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவருக்கும் ஒரு கத்தோலிக்கருக்கும் இடையிலான திருமணமும் இதில் அடங்கும். ஓர் அருளடையாளத் திருமணத்தில், கணவனுக்கும் மனைவிக்கும் சிறப்பான விதத்தில் ஏதோவொன்றை கடவுள் செய்கிறார், இது துணைவர்கள் ஒருவர் மற்றவருக்குச் செய்வதன் வழியாக நிகழ்கிறது. ஒருவர் மற்றவருக்கான அவர்களின் அன்பு மற்றும் நம்பகத் தன்மை, மேலும் ஒருவர் மற்றவருக்கான அவர்களின் தியாகங்கள் ஆகியவை அவர்களிடமும் தமது திருச்சபையிடமும் கடவுள் கொண்டுள்ள அன்பு மற்றும் நம்பகத்தன்மையின் மெய்யான குறியீடுகளாக ஆகின்றன. அவர்களின் அருளடையாளத் திருமணத்தை வாழ்வதில், ஒவ்வொரு நபரின் துணைவருக்கான கடவுளின் மீட்புத் திட்டத்தை வாழ்வதில், ஒரு கிறிஸ்தவ இணையர் கடவுளின் இறை வாழ்வில் பங்கு கொள்கின்றனர்.

7. கிறிஸ்தவக் கணவர்களும் மனைவியரும் தங்களது திருமணத்தில், அதாவது, தங்களால் சிறப்பாக இயன்ற விதத்தில் கிறிஸ்துவின் அன்பின் பண்புகளைப் பிரதிபலிக்க ஒரு சிறப்பு அழைத்தலைக் கொண்டுள்ளனர். தமது திருச்சபைக்கான கிறிஸ்துவின் அன்பு மிகவும்

முழுமையானது, அது அவர் அன்பு செய்த தமது மணவாட்டியானத் திருச்சபைக்காக அவரை இறப்புக்குக் கொணர்ந்தது. சிலுவையில் அவரது இறப்பு, மன்னிக்கின்ற, ஒப்புரவாக்குகின்ற, மற்றும் வாழ்வளிக்கின்ற அவரது அன்பைப் பிரதிபலிக்கிறது. ஆகவே, திருச்சபையில் கிறிஸ்துவின் பலிபீடத்திற்கு முன்பு கிறிஸ்தவர்கள் திருமணம் செய்யும் பொழுது, ஒருவர் மற்றவருக்கான அதே அன்பு மற்றும் தியாக வாழ்வுக்குத் தாங்கள் அழைக்கப்பட்டுள்ளதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும், ஏனெனில் பலிபீடமானது தமது திருச்சபைக்கான கிறிஸ்துவின அன்பையும் தியாகத்தையும் பிரதிபலிக்கிற இடமாக உண்மையில் இருக்கிறது. கிறிஸ்துவின அன்பையும் தியாகத்தையும் காணப்படும் விதத்தில் பிரதிபலிக்கிறத் திருமண வாழ்வை வாழ்வதில், இந்த திருமணமானக் கிறிஸ்தவ இணையர் மனித சமூகத்தில் கிறிஸ்துவின் அன்புக்கும் வாழ்வுக்கும் குறியீடுகளாக ஆகின்றனர். இந்த விதத்தில், கிறிஸ்தவ இணையர் தங்களையும் தாண்டிய ஒன்றை தங்களது திருமணம் குறிக்கிறது, மேலும் கணவன் மனைவியாக வாழ்வது மெய்யாகத் தங்களைப் பற்றியது மட்டுமன்று என்பதை எப்பொழுதும் அறிந்திருக்க வேண்டும். இன்னுமதிகமாக, திருமணமான இன்றைய நவீன இணையர் நடுவே நிலவுகின்ற அகம்சார் உணர்வுநிலைகளால் அவர்களின் திருமண ஒன்றிப்பு வரையறுக்கப்படக் கூடாது. இது உலகில் அவர்களின் சிறப்பு திருத்தூதுவமாக இருக்கிறது.

*யூமனாய் வீத்தே*, 9: “இந்த அன்பு எல்லா மனித முழுமையை விட மேலானது, உணர்வு மற்றும் ஆவியின் ஒரு கூட்டாக இருக்கிறது. இயற்கை உள்ளுணர்வா அல்லது உணர்ச்சிசார் உந்துதலா என்ற கேள்வியில் இது இல்லை. இது எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு சுதந்திர விருப்பத்தின் ஒரு செயலாகவும் உள்ளது, அன்றாட வாழ்வின் இன்பங்களிலும் துன்பங்களிலும் பிழைத்திருப்பதில் மட்டுமின்றி, ஆனால் வளர்வதிலும் அதன் நம்பிக்கை இருக்கிறது, அதனால் கணவனும் மனைவியும் ஒரு விதத்தில் ஒரே இதயமாகவும் ஒரே ஆன்மாவாகவும் ஆகின்றனர், மேலும் ஒருசேரத் தங்கள் மனித நிறைவினை அடைகின்றனர்.

இந்த அன்பு முழுமையானதாக இருக்கிறது -- இந்த மிகச் சிறப்பான ஆள்சார் நட்புறவின் வடிவத்தில், காரணமற்ற எதிர்பார்ப்புகளை அனுமதிக்காமலும் தங்கள் சொந்த ஏதுமையை மட்டும் சிந்திக்காமலும், கணவனும் மனைவியும் தாராளமாக அனைத்தையும் பகிர்கின்றனர். தமது பங்காளரை (துணைவரை) மெய்யாக அன்பு செய்கிறவர், தாம் பெறுகிறவற்றுக்காக மட்டுமின்றி, ஆனால் அந்த பங்காளரின் சொந்த நலனுக்காகவும் அவரை அன்பு செய்கிறார், தம்மையே கொடையாக மற்றவருக்கு அளிப்பதில் அவரை வளப்படுத்த இயலும்.

திருமண அன்பு மற்ற அனைத்திலும் நம்பகமானதாக, தனித்துவமானதாக, மேலும் இறப்பு வரையிலும் இருக்கிறது. இவ்வாறுதான் கணவனும் மனைவியும் அந்நாளில், தாங்கள் செய்கிறதை முழுமையாக அறிந்து, திருமணத்தில் தங்களை ஒருவர் மற்றவருக்குத் தரச் சுதந்திரமாக வாக்குறுதி அளித்தனர். சில நேரங்களில் கணவன் மனைவியின் இந்த நம்பகத் தன்மை இடர்பாடுகளை வழங்கினாலும், அது சாத்தியமற்றது என்று நிலைநாட்ட எவருக்கும் உரிமையில்லை; மாறாக, அது எப்பொழுதும் மதிப்புக்கும் கண்ணியத்துக்கும் உரியது. எண்ணற்றத் திருமணமான இணையர்களின் எடுத்துக்காட்டு, இந்த நம்பகத்தன்மை

திருமணத்தின் இயல்போடு இணைந்தது என்பதை மட்டுமின்றி, அது ஆழ்ந்த மற்றும் நீடித்த மகிழ்ச்சியின் ஆதாரமாக இருக்கிறதையும் எண்பிக்கிறது.''

*யூமனாய் வீத்தே*, 25: ''... கிறிஸ்தவக் கணவர்களும் மனைவியரும் கிறிஸ்தவ வாழ்வுக்கானத் தங்களது அழைத்தலில் கவனமாக இருக்க வேண்டும், அவர்களது திருமுழுக்கில் பெறப்பட்ட இந்த அழைத்தல், திருமண அருளடையாளத்தால் புதிதாக உறுதி செய்யப்படுவதுடன் மேலும் அதிகமாக வெளியாக்கப்படுகிறது. இந்த அருளடையாளத்தால் அவர்கள் வலுவூட்டப் பெற்று, அவர்களது கடமைகளின் நம்பகமான நிறைவேற்றலுக்கு அர்ப்பணிக்கப்படுகின்றனர் என்று கூறலாம். இவ்வாறு தங்களது அழைப்பின் முழுமையை அவர்கள் உய்த்துணர்ந்து, உலகின் முன்பாக கிறிஸ்துவுக்கு சாட்சிகளாகி சாட்சியம் பகர்கின்றனர்.''

8. திருமணம் நிரந்தரமாக இருக்கிற நோக்கமுள்ளது என்பது கத்தோலிக்கத் திருச்சபையின் புரிதலாகும், இறப்பால் பிரிக்கப்படும் வரை திருமணமான இணையரின் செல்லுந்தன்மை தொடர்ந்திருக்கும் என்பது இதன் பொருளாகும். செல்லத்தக்க அருளடையாளத் திருமணத்தின் பிணைப்பு, சிறப்பாக, முறிவுபடாதது.

*கதிம 2364*: ''திருமணமான இணையர் 'கடவுளால் நிறுவப்பட்டு, அவரது விதிகளால் ஆளப்படுகின்ற வாழ்விலும் அன்பிலும் நெருக்கமானப் பங்காளித்துவத்தை' ஏற்படுத்துகின்றனர்; 'அது மணவாழ்வின் உடன்படிக்கையில், அதாவது, அவர்களின் மாற்றவியலாத ஆள்சார் இசைவில் வேரூன்றியுள்ளது.' இருவரும் தங்களைத் திட்டவட்டமாகவும் முழுமையாகவும் ஒருவர் மற்றவருக்கு கொடுக்கின்றனர். அவர்கள் இனிமேல் இருவர் அல்லர்; தற்போதில் இருந்து அவர்கள் ஒரே உடலை உருவாக்குகின்றனர். அவர்கள் சுதந்திரமாகச் செய்துள்ள உடன்படிக்கை, அதைத் தனித்துவமான முறிவுபடாததாகப் பாதுகாக்கின்றக் கடமையை துணைவர்கள் மீது சுமத்துகிறது. 'கடவுள் இணைத்ததை, மனிதர் பிரிக்காதிருக்கட்டும்.'''

*திச 1056*: ''திருமணத்தின் இன்றியமையாதப் பண்புகளாக ஒருமையும் முறிவுபடாத்தன்மையும் இருக்கின்றன, அவை அருளடையாளத்தின் காரணமாக கிறிஸ்தவத் திருமணத்தில் சிறப்பு உறுதித்தன்மை பெறுகின்றன.''

9. திருமணத்திற்கானக் கத்தோலிக்கத் திருச்சபையின் வரையறை குறிப்பாக, ஓர் ஆணும் ஒரு பெண்ணும் குழந்தைகளைப் பெற்றெடுத்து, அவர்களைக் கத்தோலிக்கர்களாக வளர்க்கும் நோக்கத்துடன் ஒன்றிக்கிறதாக ஒழுங்கமைக்கப் பெற்றுள்ளது. ஒருவர் மற்றவரைத் திருமணம் செய்ய விரும்பும் இரு தரப்பினரும் *ஒன்றுதல்* உறவினில் ஈடுபட்டு, அவர்களது ஒன்றிப்பினால் *இனப்பெருக்கம்* செய்வதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதே இதன் பொருள்.

*திச 1055*: ''திருமண உடன்படிக்கையால், ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தங்களிடையே ஒரு பங்காளித்துவத்தை வாழ்நாள் முழுவதற்கும் நிறுவுகின்றனர், துணைவர்களின் நன்மைக்கான

இயல்பிலும், வாரிசுகளின் உருவாக்கம் மற்றும் கற்பித்தலிலும் ஒழுங்கு பெற்றுள்ள அது, திருமுழுக்கு பெற்றவர்களுக்கு இடையிலான அருளடையாள மாண்புக்காக ஆண்டவராகிய கிறிஸ்துவால் எழுப்பப்பட்டுள்ளது.''

*கதிம 1601*: ''திருமண உடன்படிக்கையால், ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தங்களிடையே ஒரு பங்காளித்துவத்தை வாழ்நாள் முழுவதற்கும் நிறுவுகின்றனர், துணைவர்களின் நன்மைக்கான இயல்பிலும், வாரிசுகளின் உருவாக்கம் மற்றும் கற்பித்தலிலும் அது ஒழுங்கு பெற்றுள்ளது; திருமுழுக்கு பெற்ற நபர்களுக்கு இடையிலான இந்த உடன்படிக்கை ஓர் அருளடையாள மாண்புக்காக ஆண்டவராகிய கிறிஸ்துவால் எழுப்பப்பட்டுள்ளது.''

*கதிம 2366*: ''இனவளமூட்டல் ஒரு கொடையாக, *திருமணத்தின் முடிவாக* இருக்கிறது, மணவாழ்வின் அன்பு இயல்பாகவே கனிதருவதாக இருக்க வேண்டும். துணைவர்களின் ஊடிடை அன்பில் சேர்க்கப்படும் ஒன்றாக, வெளியில் இருந்து ஒரு குழந்தை வராது, ஊடிடை கொடுத்தலின் ஆழத்திலிருந்து ஊற்றெடுத்து, அதன் கனியாகவும் நிறைவாகவும் வருகிறது. ஆகவே 'வாழ்வின் பக்கத்தில் இருக்கிற' திருச்சபை, 'ஒவ்வொரு திருமணச் செயலும் மனித வாழ்வின் இனப்பெருக்கத்தில் ஒழுங்கமைக்கப் பெறுவது அவசியமாகிறது' என்று கற்பிக்கிறது. 'கடவுளால் நிறுவப்பட்ட பிரிக்கவியலாத இணைப்பின் அடிப்படையில், திருமணச் செயலின் பேறுரிமைகளான ஒன்றுதல் மற்றும் இனப்பெருக்கத் தனிச்சிறப்பை, மனிதர் தமது சொந்த முயற்சியால் முறிக்கக்கூடாது என்ற இந்த குறிப்பிட்டக் கோட்பாடு, பல தருணங்களில் ஆசிரியத்தால் விளக்கியுரைக்கப் பெற்றுள்ளது.'''

*கதிம 2367*: ''வாழ்வை வழங்க அழைக்கப்பட்டத் துணைவர்கள், கடவுளின் தந்தைமையிலும் படைப்பாற்றலிலும் பங்கு கொள்கின்றனர். ''திருமணமான இணையர் மனித வாழ்வைக் கடத்துகிறது மற்றும் தங்கள் குழந்தைகளுக்கு கல்வியளிக்கிறதைத் தங்களது சரியான எய்துபணியாகக் கொள்ள வேண்டும்; அவர்கள் *படைப்பாளரான கடவுளின் அன்போடு ஒத்துழைக்க*, ஒரு விதத்தில், அதன் விளக்குநர்களாக இங்கு இருக்கின்றனர் என்பதை உய்த்துணர வேண்டும். அவர்கள் மனித உணர்வோடும் கிறிஸ்தவப் பொறுப்போடும் இந்த கடமையை நிறைவேற்ற வேண்டும்.''

*கதிம 2369*: ''ஒன்றுதல் மற்றும் இனப்பெருக்கம் ஆகிய இரண்டு இன்றியமையாத அம்சங்களையும் காப்பாற்றி வருவதில், உண்மை ஊடிடை அன்பு மற்றும் மனிதரின் மேலான அழைத்தலான பெற்றோர்த்துவத்தை நோக்கிய அதன் சார்பு என்ற முழுமையில் மணவாழ்வின் செயல் பாதுகாக்கப்படுகிறது.''

*கதிம 2373*: ''புனித மறைநூலும் திருச்சபையின் மரபும், கடவுளின் ஆசியின் குறியீட்டையும் பெற்றோர்களின் தாராளத்தையும் *பெரிய குடும்பங்களில்* காண்கின்றன.''

*யூமனாய் வீத்தே*, 9: "...இந்த அன்பு இனவளமூட்டுவதாக இருக்கிறது. இது முழுமையாக கணவன் மனைவியின் அன்பு பரிமாற்றத்திற்குக் கட்டுப்பட்டதன்று; அதையும் தாண்டி புதிய வாழ்வைக் கொணர்வதற்குத் திட்டமிடுகிறது. 'திருமணமும் மணவாழ்வின் அன்பும் அவற்றின் இயல்பில் இனப்பெருக்கம் மற்றும் குழந்தைகளுக்குக் கல்வியளித்தலை நோக்கிச் செல்கிறது. குழந்தைகள் மெய்யாகவே திருமணத்தின் உச்சக் கொடையாக இருக்கின்றனர், மேலும் தங்கள் பெற்றோர்களின் நலனில் உயர்ந்த படிநிலையில் பங்களிக்கின்றனர்.'"

10. தங்களது திருமண வாழ்வின் கனியாக ஓர் இணையர் பெறுகின்றப் பெரிய வெகுமதியாக குழந்தைகள் என்ற கொடை இருக்கிறது. மனிதகுலம் "கனிதரவும் பெருகவும்" (தொநூ 1:28) கடவுள் தந்த இசைவாணை, அவர் தமது படைப்பு வேலையில் பங்குபெற மனிதருக்கு விடுத்த அழைப்பாக இருக்கிறது.

*கவ்தியும் எத் ஸ்பெஸ்*, 50: "திருமணமும் மணவாழ்வின் அன்பும் அவற்றின் இயல்பிலேயே குழந்தைகளைப் பெற்றெடுத்தல் மற்றும் கல்வியளித்தலை நோக்கி திருநிலைப்படுத்தப் பெறுகிறது. குழந்தைகள் மெய்யாகவே திருமணத்தின் உச்சக் கொடையாக இருக்கின்றனர், மேலும் தங்கள் பெற்றோர்களின் நலனில் மிகப் பெருமளவில் பங்களிக்கின்றனர். 'மனிதன் தனியாக இருப்பது நல்லதன்று' (தொநூ 2:18) என்று கூறிய கடவுள் தாமே, 'தொடக்கத்தில் மனிதரை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார்' (மத் 19:4), தமது படைப்பு வேலையில் மனிதர் சிறப்பாகப் பங்கேற்க விரும்பி, ஆணுக்கும் பெண்ணுக்கும் ஆசி வழங்கி, கூறினார்: 'பலுகிப் பெருகுங்கள்' (தொநூ 1:28). ஆகவே, திருமணத்தின் மற்ற நோக்கங்களை குறைவாகக் கருதாத வேளையில், மணவாழ்வின் அன்பின் உண்மை செயலாக்கம், மற்றும் அதிலிருந்து விளைகின்ற குடும்ப வாழ்வின் முழுப் பொருளும், இந்த இலக்கைக் கொண்டுள்ளது: அதாவது படைத்தவர் மற்றும் மீட்பரின் அன்போடு ஒத்துழைப்பதற்கு, இந்த இணையர் உறுதியான இதயங்களோடுத் தயாராக இருக்க வேண்டும். அவர்கள் வழியாக அவர் தமது சொந்தக் குடும்பத்தை நாளுக்கு நாள் பெரிதாக்கி வளப்படுத்துவார்.

பெற்றோர்கள் மனித வாழ்வைக் கடத்துகிற மற்றும் அது கடத்தப்பட்டக் குழந்தைகளுக்கு கல்வியளிக்கிற பணியைத் தங்களது சரியான எய்துபணியாகக் கொள்ள வேண்டும். அவர்கள் படைப்பாளரான கடவுளின் அன்போடு ஒத்துழைக்கிறவர்களாக, அந்த அன்பைப் பேசி, விளக்குகிறவர்களாக இங்கு இருக்கின்றனர் என்பதை உய்த்துணர வேண்டும். இவ்வாறு அவர்கள் மனித மற்றும் கிறிஸ்தவப் பொறுப்புணர்வோடு தங்கள் பணியை நிறைவேற்றுவர்..."

*கவ்தியும் எத் ஸ்பெஸ்*, 52: குடும்பம் என்பது ஆழ்ந்த மனிதத்தின் ஒருவிதப் பள்ளியாக இருக்கிறது. ஆனால் அது தனது வாழ்வு மற்றும் எய்துபணியின் முழு மலர்ச்சியை அடைய வேண்டுமெனில், மனங்களின் கனிவான ஒன்றிப்பும், இணையர்களின் இணைந்த விவாதமும், மேலும் தங்களது குழந்தைகளின் கல்வியில் பெற்றோர்களின் கடுமையான ஒத்துழைப்பும்

அதற்கு தேவைப்படுகிறது. தந்தையின் செயல்பாடுள்ள நிகழ்மை அவர்களின் உருவாக்கத்தில் மிகப் பயனளிக்கிறது. குழந்தைகளுக்கு, சிறப்பாக அவர்களில் இளையோருக்கு, இல்லத்தில் அவர்களின் தாயின் அக்கறைத் தேவைப்படுகிறது. அவரது இந்த இல்லம்சார் வகிநிலை பாதுகாக்கப்பட வேண்டும், இருந்தாலும் அதற்காக பெண்களின் சட்டப்பூர்வ சமூக வளர்ச்சியை குறைத்து மதிப்பிடக்கூடாது.

11. கணவர்கள் மற்றும் மனைவியரின் திருமண வாழ்வு எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்று புனித பவுல் அறிவுறுத்துகிறார்.

*எபேசியர் 5:22-25*: ‘‘ஆண்டவருக்குப் பணிவது போல மனைவியர் தங்கள் கணவர்களுக்குப் பணிந்திருக்க வேண்டும், ஏனெனில், கிறிஸ்து திருச்சபையின் தலையாக இருந்து முழு உடலையும் மீட்கிறது போல, கணவர் தமது மனைவியின் தலையாக இருக்கிறார்; மேலும் திருச்சபை கிறிஸ்துவுக்குப் பணிந்திருப்பது போல, மனைவியரும் தங்கள் கணவருக்கு அனைத்திலும் பணிந்திருக்க வேண்டும். கிறிஸ்து திருச்சபையிடம் அன்பு செலுத்தி, அவளுக்காகத் தம்மைக் கையளித்தது போல, கணவர்கள் தங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்த வேண்டும்.’’

மேற்கண்ட பத்தியில் இருந்து, கணவரின் வகிநிலை கிறிஸ்துவையும், மனைவியின் வகிநிலை திருச்சபையையும் பிரதிபலிக்கின்றன என்பது தெளிவாகிறது. திருமணத்தில் கிறிஸ்துவின் ஓர் உருவமாக கணவரும், திருச்சபையின் ஓர் உருவமாக மனைவியும் இருக்கின்றனர் என்று நாம் கூறலாம். ஆகவே, கணவருக்கும் மனைவிக்கும் இடையிலான இயங்கல், கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையிலான இயங்கலைப் பிரதிபலிக்க வேண்டும். இதன் காரணமாகவே, திருச்சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிற அதேவிதத்தில் மனைவியர் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று புனித பவுல் அறிவுறுத்துகிறார். அவ்விதமாகவே, தமது திருச்சபைக்காக கிறிஸ்து தமது வாழ்வைக் கொடுத்தது போன்று கணவர்களும் தங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்தி, அவர்களுக்காகத் தங்களைக் கையளிக்கவும் விருப்பத்துடன் இருக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்துகிறார்.

12. ஒரு திருமணத்தின் உறவுநிலை அமைப்பில் அதிகாரம் என்பது கடவுளிடம் இருந்து வருகிறது. ‘‘விண்ணகத்திலும் மண்ணகத்திலும் எனக்கு எல்லா அதிகாரமும் வழங்கப் பட்டுள்ளது’’ (மத் 28:18) என்று இயேசு கூறுவது, அவரே அதிகாரம் அனைத்தின் ஆதாரமாக இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. மேலும் கிறிஸ்தவ திருமணத்தின் அருளடையாளத் தன்மை கிறிஸ்துவிடம் இருந்து வருகிறது எனில், திருமணத்தில் செயலாக்கம் பெறுகின்ற அதிகாரமும் அவரிடம் இருந்தே வருகின்றது.

ஆகவே ஒரு கிறிஸ்தவ குடும்பம், கணவரும் தந்தையுமானவரின் தலைமை மற்றும் அதிகாரத்தின் கீழ் செயல்பட வேண்டும், குடும்பச் சூழமைவில் கிறிஸ்துவின் ஓர் உருவாக இருந்து குடும்பத்தை நடத்துவது அவரது வகிநிலை ஆகும். மனைவி, திருச்சபையை மிக

ஒத்தவராக, தமது கணவரின் அதிகாரம் மற்றும் பாதுகாப்பின் கீழ் குழந்தைகளை வளர்க்க வேண்டும். குழந்தைகள், பதிலுக்கு, திருச்சபையின் தனிநபர்கள் இயேசு கிறிஸ்துவுக்கும் அவரது திருச்சபைக்கும் கீழ்ப்படிந்து அன்பு செய்கின்ற அதே விதத்தில், தங்கள் பெற்றோரை கீழ்ப்படிதலால் அன்பு செய்ய வேண்டும்.

13. மனிதப் படைப்பின் கதையில், கடவுள் புழுதியில் இருந்து ஆதாம் என்ற மனிதனைப் படைத்து, அவனது நாசிகளில் உயிர்மூச்சை ஊதினார் (தொநூ 2:7). பின்னர் கடவுள், மனிதன் தனியாக இருப்பது நல்லதன்று எனக் கூறினார் (வச. 18). கடவுள் மனிதனுக்கு ஆழ்ந்த தூக்கத்தை வரவழைத்து, அவனது விலா எலும்பில் ஒன்றை எடுத்தார். கடவுள் அந்த விலா எலும்பை ஒரு பெண்ணாக உருவாக்கினார் (தொநூ 2:21,22). இந்த நிகழ்வுரை மனிதனுக்கும் அவனது மனைவிக்கும் இடையே இருக்க வேண்டிய நெருக்கமான ஒன்றிப்பைக் காட்டுகிறது. படைப்பின் ஒழுங்கையும், படைத்தவரின் திட்டத்தையும் இது காட்டுகிறது. ‘‘நான் அவனைப் போன்ற ஒரு துணையை உருவாக்குவேன்’’ என்றார் கடவுள் (வச. 18). விலா எலும்பை எடுத்தல், நீங்கள் இதை அப்படியே ஏற்றுக்கொண்டாலும் அல்லது உருவகமாக எடுத்துக் கொண்டாலும், ஒருவர் முதலாவதும் மற்றவர் இரண்டாவதுமான உறவுநிலையில், பெண்ணானவள் ஆணைச் சார்ந்திருப்பதைச் சித்தரிக்கிறது. இந்த கதையை இன்னொரு விதத்தில் சொல்லியிருக்க முடியும். கடவுள் மொத்தமாக களிமண்ணை அல்லது புழுதியை எடுத்து, அதைச் சமமாகப் பிரித்து ஒரு பாதியில் ஆணையும் மறு பாதியில் பெண்ணையும் உருவாக்கி, அவர்கள் நாசிகளில் ஊதி உயிர் கொடுத்திருக்கலாம். மனிதனும் அவனது மனைவியும் முழுமையாக சமமான கூட்டாளித்துவம் கொண்டிருப்பது கடவுளின் திட்டமாக இருந்திருந்தால், இவ்வாறு கூறுவதே அதிகப் பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால், இந்த கூட்டாளித்துவத்தின் தலைவராக கணவர் இருப்பதே கடவுளின் திட்டம் என்பதையே மனிதப் படைப்பின் கதை உணர்த்துகிறது.

14. கிறிஸ்தவ குடும்பங்களுக்கான கடவுளின் நோக்கம், குடும்பமானது ஓர் இல்லத் திருச்சபையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

*அமோரிஸ் லெத்திசியா*, 292: ‘‘கிறிஸ்தவ திருமணம், கிறிஸ்து மற்றும் அவரது திருச்சபைக்கு இடையிலான ஒன்றிப்பின் பிரதிபலிப்பு என்ற முறையில், ஒருவர் மற்றவருக்கு சுதந்திரமான, நம்பகமான மற்றும் சிறப்பான அன்பில் தங்களை வழங்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான ஒன்றிப்பில் முழுமையாக உய்த்துணரப்படுகிறது, அவர்கள் இறப்பு வரையில் ஒருவர் மற்றவரைச் சார்ந்தவர்கள், வாழ்வைப் பகிர்கின்றவர்கள், மேலும் அருளடையாளத்தால் திருப்பொழிவு பெற்றவர்கள், அது ஓர் இல்லத் திருச்சபையாக மற்றும் சமூகத்திற்கு புது வாழ்வுக்கான புளிக்காரமாக மாறுவதற்கான அருளை அவர்களுக்கு வழங்குகிறது.’’

‘‘இல்லத் திருச்சபை’’ என்ற பதம், கிறிஸ்தவ குடும்பத்தின் அடையாளம் மற்றும் எய்துபணியை விவரிக்கிறது. அதன் வேர்கள் மறைநூலில் இருக்கின்றன. குடும்பத்தை இல்லத் திருச்சபையாக கருதுவது பழைய ஏற்பாட்டுக்கு பின்னோக்கிச் செல்கிறது. இது மிக

எளிமையாகவும் வன்மையாகவும் யோசுவாவால் கூறப்படுகின்றது: ‘‘நானும் எனது வீட்டாரும், ஆண்டவருக்கே பணி செய்வோம் (யோசு 24:15).’’ இது புதிய ஏற்பாட்டில் மேலும் முறைப்படி, குறிப்பாக புனித பவுலால் எபேசியர் 5:22-25ல் மேம்படுத்தப் பெற்றுள்ளது.

இந்த மறைநூல் பத்திகளும், மற்றவையும் திருமணம் மற்றும் இல்லத்தின் புனிதத்துவம் குறித்து பேசுகின்றன, கிறிஸ்தவ குடும்பம் ஓர் இல்லத் திருச்சபை என்பதன் பொருள் திருச்சபையின் கூடுதல் விளக்கங்களால் தரப்படுகிறது. தொடக்க திருச்சபைத் தந்தை புனித யோவான் கிறிசோஸ்தம், இல்லத் திருச்சபை என்பதன் பொருள் தொடக்கத் திருச்சபை அல்லது குடும்பம் செபித்த வெளியை விட மிகப் பெரியது என்று கற்பிக்கிறார். அவர் இதை, ‘‘உங்கள் இல்லத்தை ஒரு திருச்சபை ஆக்குங்கள்’’ அங்கு ‘‘எல்லாரும், மிகச் சிறியோரும் கூட, இறைவார்த்தையின் செய்தியைத் தேடுவதில் அர்ப்பணத்தை உணர்ந்து, அதை ஒருசேர வாழ வேண்டும்’’ என்று கூறுகிறார். கடந்த சில பதின்மாண்டுகளில், திருத்தந்தை புனித 6ம் பவுல், திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல், திருத்தந்தை பெனடிக்ட், மற்றும் திருத்தந்தை பிரான்சிஸ் ஆகியோர் இந்த புரிதலை கூடுதலாக ஆழப்படுத்தியுள்ளனர்.

திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் கூறினார், ‘‘குடும்பமானது அன்பைப் பாதுகாக்கும், வெளிப்படுத்தும் மற்றும் வெளிக்காட்டும் எய்துபணியைக் கொண்டுள்ளது, மேலும் இது மனிதருக்கான கடவுளின் அன்பு மற்றும் தமது மணவாட்டியான திருச்சபைக்கான ஆண்டவர் கிறிஸ்துவின் அன்பை பிரதிபலித்து வாழ்வதும், மெய்யாகப் பகிர்வதுமாக இருக்கிறது.’’ அவர் கிறிஸ்தவ குடும்பங்களுக்கான எய்துபணியைச் சுருக்கமாக ஊக்கவுரையில் தந்துள்ளார், ‘‘குடும்பமே, நீ இருக்கிற விதத்தில் மாறுவாயாக!’’ (*பமிலியாரிஸ் கொன்சார்த்தியோ*, 17)

15. திருமணமான இணையர் தங்கள் உறவுநிலையில் தவற மாட்டார்கள் என்பது இவற்றின் பொருளன்று. ஆனால் திருமண வாழ்வு என்பது இணையருக்கு ‘‘ஒருவர் மற்றவருடனான என்றுமுள்ள உறவில் உடல், உணர்வு, அறிவு மற்றும் ஆன்மிகம் என நிலைகளிலும்’’ வளர்ச்சி காண்பதற்கான ஒரு வாய்ப்பாகும் (*பமிலியாரிஸ் கொன்சார்த்தியோ*, 19).

16. திருமணத்தின் நிறுவுதலானது நவீன சமூகத்தின் உள்ளிருந்து வரும் தற்சார்பு கருத்தியல்களால் முன்பை விட இந்நாளில் மிகவும் கடினமானதாக இருக்கிறது.

இன்று பெரும்பாலான நவீன திருமணங்கள் மிகுந்த தற்சார்பு மற்றும் ஊடின்ப உணர்ச்சிகள் அடிப்படையில் நிகழ்வது ஆபத்தானது. கத்தோலிக்கத் திருமணத்தில் நீங்கள் கவனிக்கலாம், திருச்சபை ஊடின்பம் குறித்து எதையும் கற்பிப்பதில்லை, ஏனெனில் அது திருமணத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடித்தளமாக இருக்க முடியாது. ஐரோப்பிய வரலாற்றில் பெரிதும், திருமணமானது தங்களது குழந்தைகளின் திருமணங்களுக்கு ஏற்பாடு செய்யும் இரு குடும்பங்களுக்கு இடையிலான ஒப்பந்தமாக இருந்தது. ஊடின்ப காதல், மற்றும் எளிய பாசம் கூட முக்கியமாகக் கருதப்படவில்லை. ஊடின்ப உணர்வுகள் திருமணத்திற்கு பொருளற்ற

நலிந்த காரணமாகக் கருதப்பட்டன. திருமணம் ஒருபோதும் மனவெழுச்சி சார்ந்ததாக இல்லை; அவ்வாறு இருந்தது விபச்சாரம் மட்டுமே! இந்நாள்களில், நாம் ஊடின்ப உணர்வுகள் இன்றி திருமணம் செய்கிறோம் - அதனால் ஏராளமான மணமுறிவுகள் ஏற்படுகின்றன.

தற்சார்பு ஊடின்ப நோக்கத்தின் (காதல் பற்றிய தவறான புரிதல்) காரணமாகவும், திருமணம் தற்சார்பு கொண்டதாகச் சமூகத்தால் வரையறுக்கப்படுகின்றது, எடுத்துக்காட்டாக, ஒருபாலின திருமணம், மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான திருமணம், மனிதருக்கும் உயிரற்றப் பொருட்களுக்கும் இடையிலான திருமணம் போன்றவை. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான ஏற்பாடாகத் திருமணம் இருக்க வேண்டியதில்லை என இன்று பல அரசுகள் தீர்மானித்துள்ளன. ‘‘காதலில்’’ உள்ள எவரும் எதுவும் ‘‘திருமணத்தில்’’ ஒன்றிக்கலாம். எந்த காரணத்திற்காகவும் ‘ஒன்றின்ப வாழ்தலில்’ இருக்கின்ற மக்கள், தங்களது ஒன்றிப்பை ‘‘திருமணம்’’ என்பதைத் தவிர வேறெந்த பெயராலும் அழைக்கலாம் திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார், ஏனெனில் திருமணம் என்பது திருச்சபையின் புரிதலில் ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையிலானது.

சமூகம் தொடர்ந்து இந்த அச்சுறுத்தும் பாதையில் கீழ்நோக்கிச் செல்கையில், திருமணம் மற்றும் குடும்பத்தின் முழுமையைப் பாதுகாப்பதில் திருச்சபையின் பங்கின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது.

17. மணமுறிவு என்பது ஒரு திருமணத்தில், சிறப்பாக ஒரு கிறிஸ்தவ திருமணத்தில் சாத்தியமற்றது.

*கதிம 2382*: ‘‘திருமணமானது பிரியக்கூடாது என்பதே படைத்தவரின் உண்மை நோக்கம் என ஆண்டவர் இயேசு அறிவுறுத்துகிறார். பழைய சட்டத்திற்குள் நழுவும் தகவமைப்புகளை அவர் ரத்து செய்கிறார். திருமுழுக்கு பெற்றோரிடையே, ‘ஒரு பின்னுறுதியான மற்றும் முழுமையுற்ற திருமணம் எந்த மனித ஆற்றலாலும் அல்லது இறப்பைத் தவிர எந்த காரணத்தாலும் பிரிக்கப்பட முடியாது.’’’

*கதிம 2384*: ‘‘மணமுறிவு என்பது இயற்கை சட்டத்துக்கு எதிரான பெரும் குற்றமாகும். இது இறப்பு வரை ஒருவர் மற்றவரோடு இணைந்து வாழ்வதற்கு இணையர் சுதந்திரமாக இசைந்த ஒப்பந்தத்தை முறிக்கக் கோருகிறது. திருமண அருளடையாளம் குறித்துக்காட்டுகிற மீட்பின் உடன்படிக்கைக்கு மணமுறிவு காயத்தை ஏற்படுத்துகிறது...’’

*கதிம 2385*: ‘‘மணமுறிவு என்பது குடும்பத்திற்குள்ளும் சமூகத்திற்குள்ளும் ஒழுங்கின்மையை அறிமுகம் செய்வதால் அது நெறிகேடானது. இந்த ஒழுங்கின்மை பிரிந்த இணையருக்கும், தங்கள் பெற்றோரின் பிரிவால் துன்புறும் குழந்தைகளுக்கும் பெருந்தீங்கைக் கொணர்கிறது,

மேலும் அவர்களிடையே அடிக்கடி பிளவை ஏற்படுத்துகிறது, அதன் தொற்று விளைவால் சமூகத்தில் உண்மையில் ஒரு கொள்ளைநோயாக மாறுகிறது.''

இருந்தபோதிலும், சில வேளைகளில் இணையரின் வாழ்வு நிலையைப் பொருத்து உடல்சார் பிரிவு அனுமதிக்கப்படலாம் (அல்லது தல அதிகாரியின் இசைவாணை பெறலாம்). எனினும், அத்தகைய வழக்குகளில், திருமணப் பிணைப்பு தொடர்கிறது (காண் திச 1151-1155).

18. ஒரு நபர் குடிமை மணமுறிவு பெற்று விட்டதாலே, அந்த நபர் இயற்கைச் சட்டத்தை மீறி குற்றம் செய்துவிட்டார் அல்லது மக்கள் பொதுவாக நினைக்கிறது போன்று ''பாவத்தில் வாழ்கிறார்'' என பொருளன்று என்பதை கவனிக்க வேண்டும். மற்ற மக்களின் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களாக, அல்லது தங்களது சொந்த நிறைவின்மைகள் மற்றும் தவறானப் புரிந்துணர்வுகளால் பாதிக்கப்பட்டவர்களாக கூட மணமுறிவு பெற்ற நபர்கள் இருக்கின்றனர். நல்ல கருத்துகளோடு திருமணத்தில் நுழையும் மக்களுக்கும் கூட இவை நிகழ்கின்றன.

*கதிம 2386*: ''குடிமைச் சட்டத்தின் மணமுறிவு ஆணையால் பாதிக்கப்படும் இணையரில் ஒருவர் மாசற்றவராக இருக்கலாம்; ஆகவே, இந்த துணைவர் (கணவர் அல்லது மனைவி) அறநெறிச் சட்டத்தை மீறவில்லை. திருமண அருளடையாத்துக்கு நம்பகமாக இருக்க உண்மையாக இருக்க முயற்சித்து நீதியற்ற முறையில் கைவிடப்படும் ஒருவருக்கும், தமது பெரும் குற்றத்தின் வழியாக திருச்சபை சட்டப்படி செல்லத்தக்க திருமணத்தை அழிக்கின்ற ஒருவருக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடு இருக்கிறது.''

19. ஒரு கிறிஸ்தவ இணையர் குடிமை மணமுறிவு பெற்றதால் மட்டுமே, அவர்கள் தூய கத்தோலிக்க திருச்சபையின் முழு உறுப்பினர்களாக இல்லாமல் ஆவதில்லை. திருமணமான இணையர் ஒருவர் மற்றவரிடமிருந்து பிரிந்தப்பிறகு அல்லது மணமுறிவு பெற்றப்பிறகும் கூட, அவர்களின் திருமணத்தின் புனிதத்தை உயர்த்திப்பிடிப்பது அவர்களுக்குத் தேவையாகிறது. துணையிழந்தவர் அல்லது திருமணமாகாதவர் போன்று தங்கள் வாழ்வை வாழ்வதற்குத் தேர்வு செய்வதில், அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களும் தியாகங்களும் அவர்களின் சாட்சியத்தின் ஆற்றலை மேம்படுத்துகிறது. உண்மையில், இந்த தேர்வு பல சவால்களில் இருந்து வருகிறது. அவர்களுக்கு நல்ல நண்பர்களின் அன்பு ஆதரவும், மேலும் சில நேரங்களில் தங்கள் விசுவாசக் குழுமங்களிடம் இருந்து நடைமுறை ஆதரவும் தேவை. சரியான விதத்திலும் சரியான மனப்போக்கிலும் எடுத்துக்கொண்டால், ஆழ்ந்த ஆன்மிக வளர்ச்சியும் முதிர்ச்சியும் அவர்களின் அனுபவத்தால் ஏற்படும், அது தங்களைப் போன்றச் சூழல்களில் உள்ள மற்றவர்களைப் புரிந்துகொண்டு பரிவு காட்டவும் அவர்களைத் தயாரிக்கிறது.

20. பிரிவும் மணமுறிவும் எப்பொழுதும் பெரும் வலி, புண்படல், தனிமை, வேற்றவராதல், மற்றும் சில நேரங்களில் தீவிர நிதி எதிரதிர்வுகளோடு வரும் என்பதை நாம் நினைவில் கொள்வது தேவையாகிறது. சில மனிதர்களுக்கு, உயிரோடுள்ள தங்கள் துணைவரின் பிரிவு மற்றும் மணமுறிவால் விளையும் துயரம், தங்கள் துணைவரின் உடல்சார் இறப்பால் ஏற்படும்

துயரத்தை விட மிகப் பெரியதாக இருக்கலாம். பிரிவும் மணமுறிவும் குழந்தைகளுக்கும் கூட மிகுந்த துயரத்தைக் கொணரும், அதை அவர்கள் வெளிப்படுத்தும் திறன் கொண்டிருந்தாலும் இல்லை என்றாலும். இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டால், பிரிவும் மணமுறிவும் தீவிரமான காயத்தை ஏற்படுத்தும்.

21. ஒருவர் மற்றவரிடம் இருந்து பிரிந்து வாழ்கின்ற அல்லது குடிமை மணமுறிவு பெற்ற இணையர் புதிய ஒன்றிப்புகளில் ஈடுபடுவதில் இருந்து விலகியிருக்க வேண்டும். ஏனெனில், கடவுள் மற்றும் அவரது திருச்சபையின் கண்களில் அவர்களின் திருமண ஒன்றிப்பு தொடர்கிறது. ஒரு மனிதர் தமது மனைவியை மணமுறிவு செய்வது அனுமதிக்கப்பட்டதா என்று வினவப்பட்ட வேளையில், ''தமது மனைவியை மணமுறிவு செய்துவிட்டு மற்றொருவரை திருமணம் செய்கின்ற எவரும் அவருக்கு எதிராக விபசாரக் குற்றம் செய்கிறார். தமது கணவரை மணமுறிவு செய்துவிட்டு மற்றொருவரை திருமணம் செய்கின்ற பெண்ணும் விபசாரக் குற்றம் செய்கிறார்'' என்று இயேசு பதிலளித்தார் (மாற் 10:11-12).

*கதிம 2384*: ''ஒரு புதிய ஒன்றிப்புக்கான ஒப்பந்தம், குடிமை சட்டத்தால் ஏற்கப்பட்டாலும், அழிவின் ஈர்ப்போடு சேர்கிறது: மறுமணம் செய்த இணையர் பொதுவான மற்றும் நிலையான விபசாரச் சூழலில் உள்ளனர். ஒரு கணவர் தம் மனைவியிடம் இருந்து பிரிந்து, மற்றொரு பெண்ணை அணுகினால் அவர் ஒரு விபசாரி ஆகிறார், ஏனெனில் அந்த பெண்ணை அவர் விபசாரத்தில் தள்ளுகிறார், அவருடன் வாழும் பெண்ணும் ஒரு விபசாரியாக இருக்கிறார், ஏனெனில் அவர் மற்றொருவரின் கணவரைத் தம்முடையவர் ஆக்குகிறார்.''

இதன் காரணமாக, மணமுறிவு பெற்றவர்கள் கிறிஸ்தவ வாழ்வுக்குரியத் தங்களது குடும்பக் கடமைகள் மற்றும் பொறுப்புகளைத் தாங்களே தனியாகச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதில், அவர்களின் நம்பகத்தன்மை மற்றும் கிறிஸ்தவ இசைவுநிலையின் எடுத்துக்காட்டு போற்றுதற்குரியதாகவும், திருச்சபை மற்றும் உலகின் முன்பாக அதன் சாட்சியம் சிறப்பான மதிப்பு கொண்டதாகவும் இருக்கிறது (காண். *பமிலியாரிஸ் கொன்சார்த்தியோ*, 83).

22. பிரிந்த இணையர் பிரிவையும் மணமுறிவையும் தாண்டி புதிய உறவுநிலைகளுக்குள் சென்று, இந்த புதிய உறவுநிலைகளில் இணைந்து குழந்தைகள் பெறுகின்றத் தருணங்களும் இருக்கின்றன. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சேர்ந்து வாழ்வதாலும், குழந்தைகள் பெறுவதாலும் மட்டுமே, அவர்கள் உண்மைத் திருமணத்தில் உள்ளனர் என்று பொருள் கொள்ளத் தேவையில்லை என்று திருச்சபை கருதுகிறது. இருந்தாலும், அத்தகையச் சூழல்களில் பரிவுடன் நடந்துகொள்ளவும், அத்தகைய ''மணமுறிவாகி மறுமணம் செய்த'' மனிதர்களின் தெளிதேர்வில் துணையிருக்கத் திருச்சபை அழைக்கிறது.

*பமிலியாரிஸ் கொன்சார்த்தியோ*, 84: ''உண்மையின் நலனுக்காக, சூழல்களின் தெளிதேர்வை கவனமாகச் செயலாக்கத் தங்களுக்கு இருக்கின்றக் கடமையை மேய்ப்பர்கள் அறிந்திருக்க வேண்டும். தங்கள் முதல் திருமணத்தை உண்மையாகப் பாதுகாக்க முயற்சித்து நீதியற்ற

முறையில் கைவிடப்பட்டோருக்கும், திருச்சபை சட்டப்படி செல்லத்தக்கத் திருமணத்தைத் தங்கள் சொந்தப் பெருந்தவற்றினால் அழித்தவர்களுக்கும் இடையே உண்மையில் ஒரு வேறுபாடு இருக்கிறது. இறுதியாக, குழந்தைகளின் வளர்ப்புக்காக இரண்டாம் ஒன்றிப்பில் நுழைகிறவர்களும் இருக்கின்றனர், அவர்கள் சிலநேரங்களில் சரிசெய்ய முடியாதபடி அழிவுற்ற தங்கள் முந்திய திருமணம் ஒருபோதும் செல்லாது என்ற உணர்வில் உள்ளனர்.''

23. மனிதர்கள் மணமுறிவு பெற்று, திருச்சபையால் ஏற்கப்படாத புதிய ஒன்றிப்புக்குள் நுழையும் பொழுது, அவர்கள் திருச்சபையின் வாழ்வில் பங்கேற்கவே முடியாது என்று பொருளன்று. அவர்கள் ஆன்மிக வாழ்வைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். திருமணத்தின் புனிதம் குறித்த கிறிஸ்துவின் போதனைக்கு சாட்சியம் பகர வேண்டும் என்பதால் திருச்சபை அவர்களைத் தூய திருவிருந்தைப் பெற அழைக்க இயலாது என்றாலும், திருவழிபாட்டில் அவர்கள் பங்கேற்கும் பொழுது அத்தகையோர் திருச்சபையில் இருந்து விலக்கப்படுவது இல்லை. கிறிஸ்து மற்றும் திருச்சபையின் செபங்களோடு அவர்களின் செபங்கள் தொடர்ந்து ஒன்றிணைந்துள்ளன, அருளடையாளம் சார்ந்து வெளிப்படுத்த முடியாது என்றாலும் அவர்கள் கிறிஸ்துவுடன் ஒன்றிப்பைத் தொடர்கின்றனர். பேறுநிறை நற்கருணையில் உள்ள கிறிஸ்துவின் முன்பாக நேரத்தைச் செலவிட்டு ''வலிமை, ஆறுதல் மற்றும் ஆதரவை'' அனுபவிக்க, எல்லாரையும், தூய திருவிருந்து பெற இயலாதோரையும் திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் ஊக்குவிக்கிறார்.

*பமிலியாரிஸ் கொன்சார்த்தியோ*, 84: ''... மறுமணம் செய்த மணமுறிவான நபர்களுக்கு நற்கருணை திருவிருந்தில் அனுமதிக்காத, புனித மறைநூலின் அடிப்படையிலான தனது நடைமுறையை திருச்சபை மறுவுறுதி செய்கிறது. நற்கருணையின் தனிச்சிறப்பும் விளைவுமான கிறிஸ்து மற்றும் திருச்சபைக்கு இடையிலான அன்பு ஒன்றிப்புக்கு முரணான அவர்களின் வாழ்க்கை நிலையில் இருந்து அவர்களை இதற்கு அனுமதிக்க முடியாது. இதைத் தாண்டி, மற்றொரு சிறப்பு மேய்ப்புசார் காரணமும் இருக்கிறது: இந்த மனிதர்கள் நற்கருணை பெற அனுமதிக்கப்பட்டால், திருமணத்தின் முறிவுபடாத்தன்மை குறித்த திருச்சபையின் போதனை குறித்து விசுவாசிகள் தவறுக்கும் குழப்பத்துக்கும் இட்டுச் செல்லப்படுவார்கள்...

உடன்படிக்கையின் அடையாளம் மற்றும் கிறிஸ்துவுக்கான நம்பகத்தன்மையை முறித்ததற்காக மனம் வருந்தி, திருமணத்தின் முறிவுபடாத்தன்மைக்கு முரணற்ற வாழ்வை மேற்கொள்வதற்கு உண்மையில் தயாராய் இருக்கிறவர்களுக்கு மட்டுமே, ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக நற்கருணை பெறுவதற்கு வழி திறக்கப்படும். நடைமுறையில், குழந்தைகள் வளர்ப்பு போன்ற தீவிரக் காரணங்களுக்காக, ஓர் ஆணும் ஒரு பெண்ணும் பிரிந்திரும் கடமையை நிறைவேற்ற முடியாது, அவர்கள் 'முழுமையான தன்னடக்கத்தில் வாழ்வதற்கானத் தங்கள் கடமையை மேற்கொள்ள வேண்டும் அதாவது, திருமணமான இணையரின் முறையானச் செயல்பாடுகளில் இருந்து விலகியிருக்க வேண்டும்' என்பது இதன் பொருளாகும்.

அவ்வாறே, இணையரும் அவர்களது குடும்பங்களும், மற்றும் விசுவாசிகளின் குழுமமும், திருமண அருளடையாளத்தினால் பெறும் மதிப்பானது, எந்த மேய்ப்பரையும், எந்த காரணத்திற்காகவும் அல்லது மேய்ப்புசார் இயல்புக்கு ஈடாகவும், மணமுறிவு பெற்று மறுமணம் செய்கிறவர்களின் எவ்விதக் கொண்டாட்டத்தையும் நிகழ்த்த தடை செய்கிறது. அத்தகைய கொண்டாட்டங்கள் அருளடையாளம் சார்ந்த செல்லத்தக்க திருமணக் கொண்டாட்டத்தின் தோற்றத்தை வழங்குகின்றன, இவ்வாறு செல்லத்தக்க திருமணத்தின் முறிவுபடாத்தன்மை தொடர்பான தவறுக்குள் மக்களை இட்டுச் செல்கின்றன.

இவ்விதம் செயல்படுவதால், கிறிஸ்துவுக்கும் அவரது உண்மைக்கும் திருச்சபையாள் தனது நம்பகத்தன்மையை அறிக்கையிடுகிறாள். அதே நேரத்தில் தனது குழந்தைகளுக்கு, சிறப்பாக தங்களது சொந்தத் தவறின்றி, தங்களது சட்டப்பூர்வ துணைவரால் கைவிடப்பட்டவர்களுக்கு, தாய்க்குரிய அக்கறையை அவள் காட்டுகிறாள்.''

24. குடிமை மணமுறிவுத் தொடர்ந்து புதிய ஒன்றிப்பில் நுழைவோர் தீர்ப்பாயத்தின் உதவியை நாடலாம். ஒரு தீர்ப்பாயம் என்பது கத்தோலிக்க திருச்சபையின் அலுவல்பூர்வ நீதிமன்றம் ஆகும், மேலும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட தலத் திருச்சபையின் மேய்ப்பர் என்ற பொறுப்பை நிறைவேற்றுவதில் தமக்கு உதவுவதற்காக ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் அது ஆயரால் நிறுவப்படுகிறது (திச 369, 1419). ஆயரின் நீதிக்கரம் என்னும் முறையில், ''திருச்சபையின் உச்ச சட்டமாக எப்பொழுதும் இருக்க வேண்டிய ஆன்மாக்களின் மீட்பு'' என்ற அவரது திருப்பணியில் மறைமாவட்டத் தீர்ப்பாயம் ஒத்துழைக்கிறது'' (திச 1752).

அத்தகையச் சூழல்களில், விண்ணப்பதாரரின் முந்தியத் திருமணம் திருச்சபை வரையறையை பொருத்தவரை உண்மை திருமணமாக இருக்கவில்லையா என விசாரிக்க வேண்டும். தீர்ப்பாயத்தில் நியமிக்கப்படும் நபர்கள் ''நீதிபதிகள்'' என்று அழைக்கப்பட்டாலும், குற்றம் சுமத்தி தண்டனை வழங்குவது அவர்கள் அலுவல் அன்று. செல்லத்தக்கத் திருமணத்திற்கான கூறுகள் இருக்கின்றவா என்பதைத் தீர்மானிக்கும் தங்கள் பணிக்காக அவர்கள் போதியப் பயிற்சி பெற்றுள்ளனர். இரு நபர்கள் சிறந்த நோக்கங்களோடு திருமணத்தில் நுழைந்தாலும், திருமண நேரத்தில் செல்லத்தக்க திருமணத்திற்கு தேவையான முக்கியக் கூறுகள் இல்லாதது கண்டறியப்படும் தருணங்களும் இருக்கலாம். சில நேரங்களில் அத்தகைய விடயங்கள் தீர்ப்பாயத்தின் விசாரணை செயல்மைக்கு பிறகே வெளிச்சத்திற்கு வருகின்றன. அவற்றுக்கு சான்று இருந்தால், திருமணம் செல்லாது என்று அறிவிக்கப்பட்டு (மணமுறிவால் ஏற்கெனவே முடிவுற்ற) முதல் ஒன்றிப்புக்கு விலக்கு அளிக்கப்படுகிறது, அதனால் உதவிக்கு முறையிட்ட விண்ணப்பதாரர் தற்போது திருமணம் செய்வதற்கான சுதந்திரம் பெறுகிறார். அத்தகைய விடயங்களில், முந்திய ஒன்றிப்பில் பிறந்த குழந்தைகள் ''முறையற்றவர்கள்'' ஆவதில்லை, உண்மை திருமணத்தின் கனிகளாகத் தொடர்ந்து நடத்தப்படுகின்றனர்.

25. ஒரு விலக்கு என்பது ''திருச்சபை தரும் மணமுறிவு'' *அன்று.* ஒரு குடிமை மணமுறிவு என்பதில் உங்கள் திருமண ஒப்பந்தத்தை அரசானது சட்டப்படி முடிவுக்கு கொணர்கிறது, இது

தெளிவாக சட்ட அடிப்படையில் பொருந்தும். ஒரு விலக்கில், எதுவும் முடிவுக்கு வருவதோ அல்லது செல்லத்தகாததாக ஆவதோ இல்லை; இது அடிப்படையில் திருமண நாளில் செல்லத்தக்கத் திருமணம் நடைபெறவில்லை என்ற திருச்சபையின் அறிவிப்பு ஆகும்.

விலக்கு அளிக்கும் விடயங்களில் பல சிக்கலான விடயங்கள் அணுகப்பட வேண்டியுள்ளது. எனினும், இந்த பாடத்தின் நோக்கம் திருமண ஒன்றிப்பின் நிலைப்பை வலியுறுத்துவதில் கவனம் செலுத்துவதே அன்றி, பிரிவு மற்றும் மணமுறிவு குறித்த விடயங்களை விரிவாக ஆய்வு செய்வதன்று.

*கவ்தியும் எத் ஸ்பெஸ்*, 52: "... துணைவர்கள் தாங்களே, வாழும் கடவுளின் உருவமாகவும் நபர்களுக்குரிய அதிகாரப்பூர்வ மாண்பை அனுபவிக்கவும், சமமான பற்றீர்ப்பு, மனதின் ஒத்திசைவு மற்றும் ஊடிடை புனிதப்படுதலின் பணியில் ஒருவர் மற்றவரோடு சேர்ந்திருக்கவும் ஆக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு, வாழ்வின் மூலமான கிறிஸ்துவைப் பின்பற்றி, தங்கள் அழைத்தலின் தியாகங்கள் மற்றும் இன்பங்களால், தங்களது நம்பகமான அன்பின் வழியாக, ஆண்டவர் தமது இறப்பாலும் உயிர்ப்பாலும் இந்த உலகிற்கு வெளிப்படுத்திய அன்பின் மறைபொருளுக்கு திருமணமான மனிதர்கள் சாட்சிகளாக மாறுகின்றனர்."